**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.40/2024- PW-6**

| Name | திரு. வெங்கடேசன் |
|---|---|
| Husband/Father Name | காத்தவராயன் |
| Village /Area | நரசிங்கபுரம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கூலி |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.01.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த கோவிந்தம்மாள் என்னுடைய அக்கா ஆவார். கடந்த 14.02.2008 அன்று என்னுடைய பெரியப்பா ஜெயராமன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது அக்கா கோவிந்தம்மாளை யாரோ அடித்து கொலை செய்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரித்தார். ஏற்கனவே என் அக்கா கோவிந்தம்மாளுக்கு திருமணம் நடந்து கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தார் அப்போது சீனிவாசன் என்பவர் என் அக்காவுடன் சேர்ந்து கணவன் மனைவியாக வாழந்து வந்தார்.

இந்நிலையில் என் அக்கா கோவிந்தம்மாளின் மீது சந்தேகத்தின் பேரில் சீனிவாசன் அவ்வப்போது தகராறு செய்து வந்தார். இந்நிலையில் எனக்கு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. என்னுடைய அக்காவிற்கும் அவருடன் சேர்ந்து வாழந்து வந்த சீனிவாசனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. அதனால் எதிரி சீனிவாசன் தான் என் அக்காவை அடித்து கொலை செய்திருப்பார் என்று நான் கருதுகிறேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

முதல் விசாரணையில் கூறிய விவரங்கள் எனக்கு ஜெயராமன் கூறித்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. எனது எதிரில் எனது அக்காவிற்கும் எதிரிக்கும்

சண்டை நடைபெறவில்லை. எதிரி எனது அக்காவின் மீது என்ன காரணத்தால் சண்டையிட்டார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வீட்டு பிரச்சனை காரணமாக தான் சண்டையிட்டார்.

நான் சென்னையில் தான் கடந்த 15 ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறேன். போலீசார் தான் சம்பவத்தை பற்றி என்னிடம் கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது பெரியப்பா ஜெயராமன் கூறிதான் சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

நான் சென்னையில் வசித்து வந்த காரணத்தாலும் எனது அக்கா எனது பெற்றோரின் பேச்சை கேட்காமல் நடந்து வந்ததால் எங்களுக்கும் எனது அக்காவிற்கும் எந்த விதமான பேச்சு வார்த்தையும் இல்லாமல் இருந்தது என்று சொன்னால் சரிதான். ஆகையால் எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் போலீசார் கூறிதான் எனக்கு சம்பவத்தை பற்றி தெரியும் என்றும், இறந்தவர் எனது அக்கா என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முதல் விசாரணையில் கூறியபடி என் அக்காவை எதிரி கொலை செய்யவில்லை என்றும், எனது அக்கா எப்படி இறந்தார் என்று எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.19 18:52:21 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.